# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 201/மா/2023**
**நாள் : 29.07.2023**

திரு. B. விஜயகுமார்,
சென்னை– 81. – முறையீட்டு மனுதாரர்

மாநகர நல அலுவலர்,
சுகாதார துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் என்பவரின் 10.01.2023 நாளிட்ட மனு 18.01.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 201/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் என்பவரின் 10.01.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட 15 மண்டலங்களிலும் (200 வார்டுகளிலும்) டீக்கடை மற்றும் பெட்டிக்கடைகளில் பல இளைஞர்கள் பீடி மற்றும் சிகரெட் பிடிப்பதை வாடிக்கையாக இருந்து வருகிறது. நமது பெருநகர சென்னை மாநகராட்சி பொது இடங்களில் சிகரெட் பிடிப்பது சட்டப்படி குற்றம் என்பது வெறும் எழுத்து வடிவிலே உள்ளது. ஆனால் நடைமுறையில் சாத்தியமில்லாத ஒரு விஷயமாக உள்ளது.

2. இந்த பொது இடங்களில் புகைப்பிடிக்கும் நபர்கள் மீது சென்னை மாநகராட்சி எந்த ஒரு நடவடிக்கையும் எடுப்பதில்லை. நடவடிக்கை எடுக்கக் கூடிய சுகாதார ஆய்வாளர் மற்றும் காவல்துறை அதிகாரிகளும் இந்த விஷயத்தை கண்டுக்கொள்ளாமல் உள்ளனர். இதனால் புகை பிடிப்பவர்கள் பாதிப்பது ஒரு பக்கமாக இருந்தாலும், மற்றொரு பக்கம் பொது மக்கள், குழந்தைகள் பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளனர்.

3. புகை பிடிப்பது அவரவர் சொந்த விருப்பமாக இருப்பினும், இத்தகைய நபர்களால் பொது இடம் மாசு அடைவதுடன், சென்னை மாநகராட்சியும் இத்தகைய செயலை பார்த்தும்

ஏதும் செய்யாமல் கண்டுக்கொள்ளாமல் இருப்பது மிகவும் வேதனையாக உள்ளது. இது சம்பந்தமாக சென்னை – 600 003, ரிப்பன் மாளிகை பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை மாநகராட்சி ஆணையரிடம் 29.09.2022 அன்று மனு கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே உயர்திரு. ஐயா அவர்கள் இந்த புகாரினை விசாரணைக்கு ஏற்று சென்னையில் உள்ள பதினைந்து மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் பொது இடங்களில் சிகரெட் மற்றும் புகையிலை விற்கும் நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு தகுந்த உத்திரவினை வழங்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 25.07.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 21.07.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 25.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் உள்ள டீக்கடை மற்றும் பெட்டிக்கடைகளில் இளைஞர்கள் பீடி மற்றும் சிகரெட் பிடித்து வருகின்றனர். பொது இடங்களில் சிகரெட் பிடிப்பது சட்டப்படி குற்றம். எனவே பொது இடங்களில் புகைபிடிக்கும் நபர்கள் மீது சென்னை மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. மாநகராட்சியின் சுகாதார ஆய்வாளர்களும், காவல்துறை அதிகாரிகளும் மேற்கண்ட பொது வெளியில் புகை பிடிக்கும் நபர்கள் மீது எவ்வித நடவடிக்கை எடுக்காமல் உள்ளனர். இதனால் புகைக்கும் நபருக்கு அருகில் உள்ளோர் பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது வெளியில் புகை பிடிக்கும் நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் மாநகர நல அலுவலர் 25.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்பித்துள்ளார்.**

“மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட மனுவினையொட்டி, மேற்கண்ட மனுவின் மீதான நடவடிக்கை எடுக்கும்பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டல அலுவலர்களுக்கும் சுற்றனுப்பப்பட்டுள்ளது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் அருகில் உள்ள பெட்டிக்கடைகளில் பீடி, சிகரெட் போன்ற போதை வஸ்துகள் விற்கப்படுகின்றனவா என்பது குறித்து கண்காணித்து, அவ்வாறு விற்பனை செய்யப்படும் பொருட்களை பறிமுதல் செய்தும், COTPA Act 2003ன்படி அபராதமும் விதிக்கப்படுகின்றன. இவ்வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியால் 2022–2023 ஜூலை வரை 73,700 ரூபாய் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் பள்ளிகளுடன் சேர்ந்து அந்தந்த பள்ளிகளின் ஆசிரியர் ஆசிரியைகள் மற்றும் மாணவ மாணவியர் அடங்கிய குழு அமைக்கப்பட்டு அவர்களால் அருகில் உள்ள கடைகள் கண்காணிக்கப்படுகின்றன. மேற்கண்ட குழுவின் செயல்பாட்டையும் மாநகராட்சி அலுவலர்கள் மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்து வருகின்றனர் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பீடி, சிகரெட் பிடித்தல் போன்ற கெட்ட பழக்கங்கள் குறித்து விழிப்புணர்வு மக்களிடையே கொண்டுவர மேலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாநகர நல அலுவலரின் 24.7.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டு, இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**இந்நேர்வில், மனுதாரர் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் வாக்குமூலம், மாநகர நல அலுவலரின் அறிக்கை, புகைப்படங்கள் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரர் சென்னை மாவட்டத்தில் உள்ள 15 மண்டலங்களிலும் டீக்கடை மற்றும் பெட்டிக்கடைகளில் பல இளைஞர்கள் பீடி மற்றும் சிகரெட் பிடிப்பதால் அங்கு கூடும் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்றும், சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப்படுகிறது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இது குறித்து புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால், பொது இடங்களில் புகைப்பிடிப்போர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்திரவிட கோரியுள்ளார்.

பள்ளி மற்றும் கல்லூரிகளின் அருகில் உள்ள பெட்டிக்கடைகளில் போதை வஸ்துக்கள் விற்கப்படுகின்றனவா என்பது குறித்து பள்ளிகளுடன் சேர்ந்து அப்பள்ளி ஆசிரியைகள் மற்றும் மாணவ மாணவியர் அடங்கிய குழு அமைக்கப்பட்டு அக்குழுவால் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது என்றும், பீடி, சிகரெட் விற்பனை செய்வோர் மீது COTPA 2003ன் சட்டத்தின்படி அபராதம் விதிக்கப்படுகிறது என்றும் பீடி சிகரெட் போதை வஸ்துகள் பறிமுதல் செய்யப்பட்டு 2022-ஜுலை வரை ரூ.73,700/- அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் பீடி, சிகரெட் புகைப்பதால் உடலுக்கும், சுற்று சூழலுக்கு ஏற்படும் கெடுதிகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் மாநகர நல அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனவரி 22 முதல் ஜுலை 23 (15.7.2023) வரை 2090 கடைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 117.8 கிலோ தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பெருநகர சென்னை மாநகராட்சி அளித்த அட்டவணையின் மூலம் அறிய முடிகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு பிரிவு–21ல் தூய்மையான தண்ணீர் (ம) தூய்மையான காற்று இரண்டும் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமையாகும் என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்புகளில் பின்வருமாறு குப்பிடப்பட்டுள்ளது:-

**Article 21 includes the right to a healthy environment -**

The Supreme Court held that the right to life under Article 21 of the Constitution is a fundamental right and includes the rights to free water and free air from pollution for the full enjoyment of life. If anything endangers or impairs that quality of life in derogation of laws a citizen has recourse of Article 32 of the Consititution for removing the pollution of water or air which may be detrimental to life. The Court has stated that Article 21 includes the enjoyment of pollutant-free water and air for full enjoyment of life as far as the release of industrial pollution into rivers is concerned.

**Right to Clean Environment**

· The Right to Life under Article 21 means a life of dignity to live in a proper environment free from the dangers of diseases and infection. Maintenance of health, preservation of the sanitation and environment have been held to fall within the purview of Article 21 as it adversely affects the life of the citizens and it

amounts to slow poisoning and reducing the life of the citizens because of the hazards created if not checked .

மனுதாரர் குறிப்பிட்டவாறு பொது வெளியிலும் பள்ளிக் கல்லூரி வளாகங்களுக்கு அருகே பீடி, சிகரெட் பிடிப்பதை தவிர்ப்பது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி தேவையான தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பள்ளி மற்றும் பொது வெளியில் விழிப்புணர்வு பிரச்சாரம் போன்ற நடவடிக்கைகள் எடுத்து வருவது வரவேற்கத்தக்கது ஆகும். பொது வெளியில் பீடி, சிகரெட் புகைப்பவர்களை தண்டிக்கவும் பெட்டிக்கடைகளில் குறிப்பாக பள்ளி, கல்லூரிகளின் அருகே தடைசெய்யப்பட்ட பொருட்களையும், பீடி சிகரெட் போன்ற பொருட்களை விற்பனை செய்வதை தடை செய்யவும் அவசியமான ஒன்றாகும்.

அபராதத் தொகை விதிப்பதன் மூலம் மக்களிடையே பீடி, சிகரெட் பிடிக்கும் பழக்கம் குறைய வாய்ப்பு இருப்பதாலும், தடை செய்யப்பட்ட பொருட்களை கடைகளில் விற்பனை செய்வோரிடம் ஒருவித அச்சம் ஏற்படும் என்பதாலும், COTPA சட்டத்தை இன்னும் முறையாகவும், கடுமையாகவும் பயன்படுத்த வேண்டும் என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

பொது வெளியில் பீடி, சிகரெட் பிடிப்போர் மீதும், தடைசெய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யும் கடை உரிமையாளரின் மீதும் மண்டல அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுத்திடவும் மாதாந்திர கூட்டங்களை ஏற்பாடு செய்து களப் பணியாளர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்புமாறும் மாநகராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. B. விஜயகுமார்,
14/15, சால்ட் குறுக்கு தெரு, துர்கா தேவி நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மாநகர நல அலுவலர்,
சுகாதார துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.
4. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்